## August 16, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பாதுகாப்பு, எரிசக்தி, நவீன தொழில்நுட்பம், மருந்து-உர தயாரிப்பு என அனைத்துத் துறைகளிலும் உள்நாட்டு உற்பத்திக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று சுதந்திரதின உரையில் பிரதமர் நரேந்திர மோடி உறுதி படத்தெரிவித்தார்.
   - i. உலக அளவில் பொருளாதார சுய நலம் நிலவும் சூழலில், தற்சார்பை உறுதி செய்வது காலத்தின் கட்டாயம்;
   - ii. போர் விமான என்ஜின்கள் தொடங்கி சமூக ஊடகம் வரை இந்தியாவில் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.
   - iii. வர்த்தக ரீதியில் இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள நிலையில், பிரதமரின் கருத்துகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.
2. 2047-ஆண்டுக்குள் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் நோக்கில், பிரதமர் மோடி தனது உரையில் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள் வருமாறு :-
   - i. **மக்கள்தொகை ஆய்வுத் திட்டம்** - சட்டவிரோத ஊடுரு வலால் மக்கள்தொகை ரீதியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு சவாலை எதிர்கொள்வதற்கு உயர் அதி காரம் கொண்ட மக்கள்தொகை ஆய்வுத் திட்டம் தொடங்கப்படும்.
   - ii. **தேசிய ஆழ்கடல் ஆய்வுத் திட்டம்** - பெட்ரோல், டீசல், எரி வாயு இறக்குமதிக்கே பட்ஜெட் டில் பெரும் பங்கு செலவிடப் படுகிறது. எனவே, கடல் படு கையில் எண்ணெய்-எரிவாயு வளங்களைக் கண்டறிய தேசிய ஆழ்கடல் ஆய்வுத் திட்டம் தொடங்கப்படும்.
   - iii. **இந்திய தயாரிப்பு 'சிப்'** - செமிகண்டக்டர் துறையில் பிற நாடுகள் செழித்தோங்கிய நிலையில், இந்தியாவில் பல்லாண்டுகளாக இத்தொழிற்சாலை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவே இல்லை. இப்போது முழுவீச்சில் பயணிப்பதால், இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் 'சிப்' வெளியிடப்படும்.
   - iv. **10 மடங்கு அணுசக்தி** - புதிதாக 10 அணுஉலைப் பணிகள் நடை பெற்று வருவதால், 2047-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் அணுசக்தித் திறன் பத்து மடங்கு அதிகரிக்கும்.
   - v. **சீர்திருத்தப் பணிக் குழு** - பொருளாதார வளர்ச்சியை விரை வுபடுத்தும் நோக்கில், நாட்டில் அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல பிரத்யேக சீர்திருத்த பணிக் குழு உருவாக்கப்படும்.
   - vi. **இளைஞர்களுக்கு உதவித்தொகை** - தனியார் நிறுவனங்களில் புதிதாகப் பணியில் இணையும் இளைஞர்களுக்கு ரூ.15,000 உதவித்

தொகை அளிப்பதற்கான ரூ.1 லட்சம் கோடி மதிப்பீட்டில் மாபெரும் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு திட்டம் தொடங்கப்படும். இதன் மூலம் 3 கோடி இளைஞர்கள் பலனடைவர்.

3. சரக்கு மற்றும்சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதத்தை 5%, 18% என இரு விகிதங்களாக குறைக்கவும், விலை உயர்ந்த 7 பொருள்கள் மீது மட்டும் 40% வரி விதிக்கவும் மாநில நிதியமைச்சர்கள் குழுவுக்கு (ஜிஓஎம்) பரிந்துரைத்துள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்தது.
    i. இந்த மறுசீரமைக்கப்பட்ட ஜிஎஸ்டி விகிதத்துக்கு ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்தவுடன் 12%-இன்கீழ் வரி விதிக்கப்பட்டுவரும் 99 சதவீத பொருள்கள் 5%-க்குள் கொண்டுவரப்படவுள்ளன.
    ii. அதேபோல் 28%-இன்கீழ் வரி விதிக்கப்படும் 90 சதவீத பொருள்கள் 18% வரி விதிப்புக்குள் கொண்டுவரப்படவுள்ளன.

4. இந்தியாவில் முதல்முறையாக பிவி கண்காணிப்பு செயற்கைக்கோள் திரள் அமைக்க பிக்ஸல் ஸ்பேஸ் இந்தியா தலைமையிலான கூட்டிணைவுக்கு இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (இன்ஸ்பேஸ்) அனுமதி அளித்துள்ளது.
    i. இந்திய விண்வெளி வரலாற்றில் முதல்முறையாக புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் திரள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
    ii. இதற்காக நடத்தப்பட்ட ஏலத்தில் பங்கெடுத்த 3 கூட்டிணைவுகளை தீவிரமாக ஆராய்ந்தபிறகு, பெங்களூரை சேர்ந்த பிக்ஸல் ஸ்பேஸ் இந்தியா தலைமையிலான கூட்டிணைவுக்கு இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் ஆக. 12-ஆம் தேதி அனுமதி அளித்துள்ளது.
    iii. இந்த கூட்டிணைவு பிக்ஸல் ஸ்பேஸ் இந்தியா, பியர்சைட் ஸ்பேஸ், ஸாட்ஷூர் அனாலிட்டிக்ஸ் இந்தியா, துருவா ஸ்பேஸ் நிறுவனங்களை உள்ளடக்கியதா வரலாற் கண்காகும்.
    iv. அரசு, தனியார் கூட்டுமுயற்சியில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்த திட்டத்தின்கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.1,200 கோடி முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் திரள், 12 செயற்கைக்கோள்களை கொண்டதாகும்.
    v. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் திரளில் பாராக்ரோமாட்டிக், மல்ட்டி ஸ்பெக்ட்ரல், ஹைபர்ஸ்பெக்ட்ரல், மேக்ரோவேவ் சிந்தடிக் அபர்ச்சர் ரேடார் சென்சார்கள் பொருத்தப்பட்டிருக்கும். இது, வானிலை மாற்றக் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை, வேளாண்மை, உள்கட்டமைப்பு, கடல் கண்காணிப்பு, தேசிய பாதுகாப்பு, நகர்ப்புற திட்டமிடல் உள்ளிட்டவற்றுக்கு பயன்படுத்தக்கூடிய திறனாய்வுக்கு உகந்த தரவுகள், மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளை அளிக்கும். இது

தவிர, உலக அளவில் தேவைக் கேற்ற புவியியல் நுண்ணறிவு தரவுகளையும் வழங்கும்.

vi. இதுகுறித்து இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (இன்ஸ்பேஸ்) தலைவர் பவன் கோயங்கா கூறுகையில், 'இதன்மூலம், விண்வெளித் துறையில் இந்திய தனியார் நிறுவனங்களின் காலம் தொடங்கவிருக்கிறது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் கூட்டுமுயற்சி, வளர்ச்சி, புத்தாக்கம், தற்சார்புக்கு உகந்த சூழலை கட்டமைக்கும்.

5. ஜம்மு- காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் உள்ள சோசிடி கிராமத்தில் மேகவெடிப்பால் ஏற்பட்ட பெருவெள்ளம்-மண் சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 60-ஆக உயர்ந் துள்ளது. மாயமான 69 பேரை தேடும் பணி இரண்டாவது நாளாக தொடர்ந்தது.

6. ஆகஸ்ட் மாதத்தில் ரஷியாவிடம் இருந்து ஒரு நாளைக்கு இந்தியா இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெய் 20 லட்சம் பீப்பாயாக அதிகரித்துள்ளது.

i. உக்ரைனுடன் போரில்ஈடுபடும் ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதாக குற்றஞ்சாட்டி இந்திய பொருள்கள் மீது ஏற்கெனவே விதித்த 25 சதவீத வரியுடன் கூடுதலாக 25 சதவீத வரியை அமெரிக்கா அண்மையில் விதித்தது.

7. தனியார் வாகனங்கள் ரூ.3,000 கட்டணம் செலுத்தி பெறக் கூடிய ஃபாஸ்டேக் பயண அட்டை வசதியை, மத்திய அரசின் கீழ் செயல்படும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அமல்படுத்தியது.

i. ஃபாஸ்டேக் வருடாந்திர பயண அட்டை வசதியின் கீழ், ரூ.3,000 கட்டணத்தை ஒருமுறை செலுத்தி ஓராண்டு அல்லது 200 முறை தனியார் வாகனங்கள் சுங்கச்சாவடிகளை கடக்க முடியும்.

ii. இந்த வசதியின் கீழ் ராஜ்மார்க் யாத்ரா செயலி அல்லது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய வலைதளம் மூலம், ரூ.3,000-ஐ செலுத்தினால் 2 மணி நேரத்தில் ஃபாஸ்டேக் வருடாந்திர பயண அட்டைசெயல்பாட்டுக்கு வரும்.

iii. இந்நிலையில், நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச்சாலைகளில் சுமார் 1,150 சுங்கச்சாவடிகளில், ஃபாஸ்டேக் வருடாந்திர பயண அட்டை வசதி வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டது.

8. அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் 'குற்ற அவசரநிலை அறிவித்து, நகர காவல் துறையை டொனால்ட் டிரம்ப் கைப்பற்றியதை எதிர்த்து அந்த நகரின் மாநகராட்சி வழக்கு தொடர்ந்துள்ளது.

i. மத்திய அரசு அதிகாரியான டெர்ரி கோலை வாஷிங்டன் காவல் துறைத் தலைவராக நியமித்து, குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதாக டிரம்ப் அரசு கூறியுள்ளது.

ii. இது சட்டவிரோதமானது எனவும், மாநகரின் 7 லட்சம் மக்களின் உரிமைகளைப் பறிப்பதாகவும் தனது மனுவில் மாநகர வழக்குரைஞர் பிரையன் ஷ்வால்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

9. *பிளாஸ்டிக் மாசு பாட்டு நெருக்கடியை எதிர்கொள்வதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்குவதற்காக ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தை எந்த உடன்பாட்டையும் எட்டாமல் நிறை வடைந்தது.*
   i. *அந்த நகரில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் 11 நாள்கள் நடந்த பேச்சுவார்த்தையில், 184 நாடுகளின் பிரதிநிதிகள் பிளாஸ்டிக் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது மற்றும் நச்சு ரசாயனங்களுக்கு உலகளாவிய, சட்டபூர்வ கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து ஆலோசனை நடத்தினர். இருந்தாலும், இந்த விவகாரங்களில் ஒருமித்த கருத்து எட்டப்பட வில்லை. எனவே, கடைசி சுற்று பேச்சுவார்த்தையாக இருக்க வேண்டிய இது, தென் கொரியாவில் நடந்த முந்தைய கூட்டத்தைப் போலவே ஒப்பந்தமின்றி முடிந்தது.*
   ii. *மனித உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் ரசாய னங்களைக் குறைப்பது மற்றும் ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்களைக் குறைப்பது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.*
   iii. *உலகில் ஆண்டுதோறும் 40 கோடி டன் பிளாஸ்டிக் உற்பத்தியாகிறது, இது 2040-ஆம் ஆண்டு வாக்கில் 70 சதவீதம் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.*